**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 76 / 2021** |
| **Deposition of witness for** | : | **PW : 14** |
| **Name** | : | **திரு. சுதன்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **01.11.2023**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை தலைமை பொறியாளர் அலுவலகத்தில் உதவி பொறியாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2020 ம் ஆண்டு நான் M கல்லுப்பட்டி மின்வாரிய அலுவலகத்தில் உதவி பொறியாளராக பணிபுரிந்து வந்தேன். அப்போது, காவல் ஆய்வாளர் அவர்கள் எங்கள் அலுவலகத்திற்கு வந்து கடந்த 23.01.2020 ம் தேதி முதல் 28.01.2020 ம் தேதி வரையிலான காலகட்டத்தில் துள்ளுக்குட்டிநாயக்கனூர் கிராமத்தில் மின் தடை இருந்ததா என்று விசாரணை செய்தார். அதற்கு நான், அந்த காலகட்டத்தில் மேற்படி பகுதியில் மின் தடை எதுவும் ஏற்படவில்லை என்றும் மின்தடை எதுவும் செய்யவில்லை என்றும் சொன்னேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

மின்தடை ஏற்படும் காலகட்டத்தில் மின்தடை செய்யப்படும் நேரம்,

மின்சாரம் வழங்கப்பட்டும் நேரம் பற்றி ஒரு பதிவேட்டில் பதிவு செய்து பராமரித்து வருவோம் என்றால் சரிதான். எங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் அந்த காலகட்டத்தில் மொத்தம் 98 transformer இருந்தது. ஒவ்வொரு transformer லும் Feeders தனித்தனியாக இருக்கும். துள்ளுக்குட்டிநாயக்கனூர் கிராமத்திற்கு எந்த feeders மூலம் மின்சாரம் வழங்கப்பட்டது என்று தற்சமயம் சொல்ல இயலாது என்றால் சரிதான். ஒவ்வொரு ஊரிலும், வீதிகளில் தெரு விளக்குகள் போடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அதேபோல் துள்ளுக்குட்டிநாயக்கனூர் பகுதியிலும் 23.01.2020 முதல் 28.01.2020 ம் தேதிவரையிலான காலகட்டத்தில் தெரு விளக்குகள் இருந்தன என்றால் சரிதான். அந்த தெரு விளக்கு கம்பங்களுக்கு, வீதி, எண் ஆகியவை இருக்கும் என்றால் சரிதான். துள்ளுக்குட்டிநாயக்கனூர் பகுதியில் எத்தனை தெருக்கள் உள்ளன என்றும் எத்தனை தெரு விளக்குகள் இருந்தன என்று என்னால் குறிப்பிட்டு சொல்லஇயலாது என்றால் சரிதான். துள்ளுக்குட்டிநாயக்கனூரில் பாப்பநாயக்கன்பட்டி மெயின்ரோடு பகுதியில் எத்தனை தெரு விளக்குகள் இருந்தன என்றும் அதில் எத்தனை விளக்குகள் எரிந்த நிலையில் இருந்தன என்றும் என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரிதான். ஆண்டுகள் 3 ஆகிவிட்டதால் துள்ளுக்குட்டிநாயக்கனூர் பகுதியில் எந்த தெருவில் எந்த தெருவிளக்கு எரியாமல் இருந்தது என்ற விபரத்தை நாங்கள் பராமரிக்கும் பதிவேட்டைப் பார்க்காமல் தற்போது பதிலளிக்க இயலாது என்றால் சரிதான். அந்த Logbook அல்லது ஏதேனும் பதிவேட்டை போலிசார் என்னை விசாரணை செய்யும் போது கைப்பற்றினார்களா என்றால் இல்லை. நானாக logbook ஐ போலிசாரிடம் விசாரணையின் போது கொடுக்கவில்லை. எனக்குக் கீழே துள்ளுக்குட்டிநாயக்கனூரில், வயர்மேன், லைன்மேன் ஆகியோர் பணிபுரிகிறார்கள் என்றால் சரிதான். துள்ளுக்குட்டிநாயக்கனூரில் மின்சாரம் பற்றி தெளிவாக தெரிந்து கொள்ள அந்த வயர்மேன், லைன்மேன்

ஆகியோரை விசாரணை செய்தால் தெளிவாகத் தெரியவரும் என்றால் சரிதான். நான் காவல்துறை கேட்டுக்கொண்டதன் பேரில் துள்ளுக்குட்டிநாயக்கனூரில் 23.01.2020 ம் தேதி முதல் 28.01.2020 ம் தேதிவரை தடை இல்லாத மின்சாரம் இருந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. Logbook ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அந்த பதிவேட்டை நீதிமன்றத்திற்கு கொண்டுவரவும் இல்லை என்றும் போலிசார் விசாரணையின் போது தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை